4th February 1966]

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டம் நடக்கின்ற விஷயம் எல்லாக் கட்சிகளுக்கும் அறிவிக்கப்பட்டதா ? ஒரு கட்சித் தலைவர் மட்டும் இதில் பங்கு கொள்ளக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கூட்டம் நடைபெறுவது பற்றி கட்சித் தலைவர்கள், மன்ற உறுப்பினர்கள், பொது மக்கள் அனைவருக்குமே தெரியும். லட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள். ஒரு கட்சி தவர் மட்டுட் பங்குகொண்டார் என்றால், அவர் அவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டார் அந்தக் கூட்டத்தில் என்பதுதான் அதற்குப் பொருள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்தப் பப்ளிக் மீட்டிங்குக்காக செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த மன்ற உறுப்பினர்கள் யாரும் அழைக்கப் படவில்லை. அது மன்றத்தினுடைய அங்கத்தினர்களை குறைவாக மதிப்பிடுகிறார்கள் என்று தானே அர்த்தம் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அழைப்பு அனுப்பவில்லை என்று சொன்னார்கள். அமைச்சர்களுக்கும், வேறு யாருக்கும் தான் அழைப்பு அனுப்பவில்லை. பொது மக்களும், அமைச்சர்களும் மற்றவர்களும் அழைப்பு இருக்கிறது என்று கருதித்தான் வந்திருந்தார்கள். ஆகவே அழைப்பு அனுப்பவில்லை என்று புகார் சொல்ல இடம் இல்லை.

பாதுகாப்புக் கைதிகள்

*84 கேள்வி.—திரு. மு. கருணாநிதி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காவலில் உள்ள பாதுகாப்புக் கைதிகளின் பிரச்சினையை அவ்வப்போது பரிசீலனை செய்ய வேண்டும் என மத்திய அரசு அண்மையில் இம்மாநில அரசாங்கத்திற்கு யோசனை தெரிவித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அந்த யோசனையின் பேரில் இம்மாநில அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The correspondence with the Government of India on such matters is treated as secret.

(b) The question does not arise. However, the cases of detenus are being reviewed by Government as required by Rule 30-A of the Defence of India Rules, 1962.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, பாதுகாப்பு விதிகளைப் பயன்படுத்துவதை நிறுத்திவிடவேண்டும் என்று மத்திய சர்க்காரிடமிருந்து ஏதாவது யோசனை வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது உண்டு, இல்லை என்று சொல்வதற்கு இல்லை. உண்டு என்றாலும், அல்லது இல்லை என்றாலும், அது ரகசியமான விஷயம் என்பது போய்விடும். அதனால்; இந்தக் கேள்விக்கு விடை அளிப்பதற்கில்லை.